அரசும் அதைக் குறித்து மத்திய அரசுக்கு எழுதினால் தான் முடியும். ஆனால் மத்திய அரசிடமிருந்து அனுமதி வருகின்ற வகையில், அவர்கள் அங்கே இருக்கின்ற வகையில், அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு, அவர்கள் உயிரோடு இருப்பதற்கு ஏதாவது ஒரு வகையில் வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறுகிறபோதே அதைக் குறிப்பிட்டு இருக்கிறேன். எங்களுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும். ஆகவே, அதைப் பற்றி நாங்கள் எழுதிக் கேட்டு, அங்கேயிருந்து என்ன ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ, அதை நாங்கள் முடிவு எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1–4–1982) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

157. நெருக்கடி நிலைக்கு முன்னர் 1—1—1972 முதல் 31—1—1976 வரையிலான காலத்தில் நடந்த அத்துமீறல்கள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட தனி நபர் கமிஷன் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. என்.எஸ். இராமசாமி அவர்களின் அறிக்கை—ஒன்பதாம் பகுதி—இறுதி அறிக்கை (தமிழ்) 1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60 1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

158. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் நீக்கப்பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 12—5—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 28 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10,1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது

1982 மார்ச் 13]

159. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ் நாடு தொழில்வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்தின் 1980—81 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

174. வனத்துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

175. இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் 1976—77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்) மீதான பொதுக்கணக்குக் குழுவின் பனிரெண்டாவது அறிக்கை (பாகம்-I) (தமிழ், ஆங்கிலம்).

176. 1972—73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து பொதுக்கணக்குக்குழு (1977—78) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி பொதுக் கணக்குக்குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

177. இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் 1976—77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை (பாகம் II (தமிழ், ஆங்கிலம்).

178. 1976—77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை (பாகம் I) (தமிழ், ஆங்கிலம்).

179. 197 —77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக்கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை (பாகம் I) (ஆங்கிலம்).

180. இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1976—77, 1977—78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை (ஆங்கிலம்).